www.tamilarangam.net

# தமிழன்

ஏடு : 03 பிப்ரவரி : 1990

10.00



## சங்க காலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அட்டைப்பட விளக்கம் | பக்கம் | 1 |
| 2. | ஆசிரியரங்கம் | ......... | 2 |
| 3. | பெரியார் ஈ.வே.ரா. செல்வா சிந்தனைகள் | ......... | 3 |
| 4. | தமிழக வரலாறு : சங்க காலம்<br>பேராசிரியர்: இரா. மதிவாணன் | .........<br>......... | 4 |
| 5. | பாவாணரின் தமிழ்த்தொண்டு | ......... | 12 |
| 6. | தமிழ்நாடு பொருளாதாரம் : பயிர்வளம்<br>திருமதி யாழினி இராஜேந்திரன் | ......... | 14 |
| 7. | தமிழீழத்தில் இந்தியாவின் இன்றைய நிலை<br>ச. அ. டேவிட் | ......... | 21 |
| 8. | திருக்குறள் | ......... | 23 |
| 9. | ஐந்திணை | ......... | 24 |


**அட்டைப்பட விளக்கம் :-**

இறையனார் அகப்பொருளில், மூன்று தமிழ்ச் சங்கங்கள் கூறப்படுகின்றன. முதல் சங்கம், தென் மதுரையில் 4,440 ஆண்டுகள் இருந்ததாயும், இரண்டாம் சங்கம் கபாடபுரத்தில் 3700 ஆண்டுகள் நீடித்ததாயும், கடைச் சங்கம் வடமதுரையில் இயங்கியது என்றும் சொல்லப்படுகிறது. முதல் இரண்டு சங்கங்களும் கடல்கோளால் அழிந்தன என்பது கூறப்பட்டுள்ளது.

இன்றைய பல ஆராய்ச்சியாளர்கள், இச் செய்திகளை முழுமையாய் ஏற்றுக்கொள்வதில்லை. ஆயினும், புராணங்கள், வரலாறுகள் மூலம் சங்கங்கள் இருந்ததும் பின்னர்க் கடல்கோள்களால் அழிக்கப்பட்டதும் தெளிவாகிறது. சிறப்பாக, இலங்கைச் சரித்திரம் கி.மு. 700 ஆண்டளவில் ஏற்பட்ட கடல் கோள்களைக் கூறுகின்றன.

சில ஆராய்ச்சியாளர்கள் கி.மு. 500 ஆண்டு முதல் கி.பி. 300 ஆண்டு மட்டும் மூன்று சங்கங்கள் இருந்தன என்று கூறுகின்றனர். வேறு சிலர் இது "கடைச் சங்க காலம்" என்பர்.

தொல்காப்பியம் தமிழில், இன்று உள்ள நூல்களில் முதல் நூல். இது கி.மு. 700 ஆண்டைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது. இது இரண்டாம் சங்க நூல் என்பது கருத்து. தொல்காப்பியம் ஓர் முதிர்ச்சியுற்ற சிறந்த நூல். இதை உருவாக்க வேண்டிய புலமை தோன்ற ஆயிரம் ஆண்டு வளர்ச்சி அவசியம் என்பதும் கவனத்துக்குரியது.

சிலப்பதிகாரம், சங்க இறுதிக்கால, அன்றேல் சங்கம் மருவிய கால நூல் என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அது சேரன் செங்குட்டுவன் காலத்தையொட்டியது. ஆகையால் கி.பி. 300 ஆண்டுக்குச் சேர்ந்தது எனப்படுகிறது. இவ்வாண்டுகள் சங்க காலத்தைக் கணிக்க உதவுகின்றன.

தமிழ் அறிஞர்கள் சங்ககால ஆராய்ச்சியில், ஈடுபட்டுப் போதிய ஆதாரங்களுடன் சங்ககால எல்லைகளை நிருபிப்பது தமிழினத்துக்குப் பெரும் உதவியாயிருக்கும். தமிழ்ப் பல்கலைக்கழகம் இதைப் பெரும் தமிழ்ப் பணியாக மேற்கொள்ள வேண்டும்.

சங்ககாலம் தமிழினத்தின் 'பொற்காலம்'. பெரும்பாலும் கலப்படம் இல்லாது முழுத்தமிழ்ப் பண்பாட்டில் ஊறிய காலம். தமிழினத்தின் அக, புற வாழ்வைச் சித்திரிக்கும் காலம். இக்காலத்தின் பண்புகளை ஆராய்ந்து மீண்டும் தமிழினம் தன் இயல்புகளுக்கேற்பச் சீராய்ச் சிறப்பாய் வாழ வழி வகுப்பது தமிழினத் தலைமைகளின் தலையாய கடமையாகும்.

படம் தயாரிப்பு : **ஆனந்த முருகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழன்

1-2-90

தமிழினம் விலைமதிக்க முடியாத புதையல்மேல் இருந்து பிச்சை கேட்பவன் போல் காட்சியளிக்கிறது.

மனிதப் பண்பாட்டு வரலாற்று ஆரம்ப காலம் முதல் இன்று சமீப காலம் வரை உலகக் கலாசார வளர்ச்சிக்குத் தமிழினம் உறுதுணையாய் இருந்து வந்துள்ளது.

சித்தர்களும், யோகிகளும் மனித எல்லைகளுக்கப்பால் சென்று புது உலகம் கண்டு களித்து மானுடத்துக்கு வழிகாட்டிய பெருமை தமிழினத்துக்குண்டு.

கலைகளில் இசை, நடனம் சிற்பம் கட்டடம், நகரமைப்பு, இலக்கியம், இலக்கணம் என்ற பல துறைகளில் அழிவிலாப் புகழ் எய்தி தமிழினம் சிறப்புற்றிருந்த சரித்திரம் உண்டு.

உண்மைக்கும், நேர்மைக்கும், எளிமைக்கும், மனிதாபிமானத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய பெருமக்களைப் பெற்றெடுத்த பெருமை தமிழினத்துக்குண்டு.

20ஆம் நூற்றாண்டில் அறிவியல் அடிப்படையில், நாற்பது சதவிகிதப் படிப்பறிவில்லாத சமுதாயத்தைத் தட்டி எழுப்பிப் புரட்சிப் பாதையில் வழி நடத்திய பெருமை பெரியார் ஈ. வே. ரா. வுக்குண்டு.

நவீன அரசியல் வானில் விடிவெள்ளிகளான காமராசர், அண்ணாவை உருவாக்கி வளர்த்த பெருமை தமிழர்களுக்குண்டு.

நவீன அறிவியல் உலகில், பல புது மொழிகளைக் கற்று, சர்வதேச அரங்கில் தமிழினத்துக்குப் பெருமை தேடிக்கொடுத்த அறிவாளிகளைப் பெற்றெடுத்த பெருமை தமிழினத்துக்குண்டு.

ஆயினும், கடந்த சில ஆண்டுகளில் வாழ்வின் பல துறைகளில் தமிழினம் பின்தங்கி நின்று பிச்சை கேட்பவன் நிலைக்கு வந்துவிட்டது.

இப் பரிதாப நிலைக்கு முக்கியக் காரணம் இன்றைய தமிழினத் தலைமைகளின் இழிநிலையே.

தமிழ்மறையாம் திருக்குறள் உண்மைகளை மறந்து, பெரியார் ஈ. வே. ரா. அறிவியல் அறிவுரைகளை தட்டிக் கழித்து மனிதாபிமான நெறிமுறைகளில் நின்று விலகி, பணம் பொருள் பண்டங்களுக்காகவும் பெருமைக்காகவும் போலி வாழ்க்கை வாழும் தலைமைகள் தமிழினத்தைச் சீரழிக்கின்றன.

இந்த அவல நிலை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மீண்டும் தமிழினம் தன் உண்மை உருவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். உலக முன்னணியில் வெற்றி நடைபோட வேண்டும்.

தமிழினமே ! ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படக் கற்றுக்கொள். கவர்ச்சிக் கேலித் தோற்றங்களில் சிக்கிச் சீரழிந்து விடாதே!

ஆசிரியர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெரியார் ஈ. வே. ரா. சிந்தனைகள்

உலக நாடுகளை ஒப்பிடுகையில் தமிழ்நாடு பெரிது. உலகத்தில் 85 நாடுகள் உள்ளன. இவற்றில் 74 நாடுகளுக்கு மேல்—பரப்பிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி—மலானவர்களாகவே நாம் இருக்கிறோம். மற்ற 74நாட்டுக்காரர்கள் பிழைக்கும்போது நம்மைத் தானா காக்கை தூக்கிக்கொண்டு போய்விடும்.

பூகோளம் தெரியுமா? சரித்திரம் தெரியுமா உனக்கு? உன் இரத்தம் கொண்டவர் தமிழ்மக்கள்—இலங்கையில் நாய் போலத்திண்டாடுகிறார்கள்! அதைப்பற்றிக் கொஞ்சமாவது கவலைப்பட்டதுண்டா? தமிழ ருக்கு ஆளும் வசதியில்லையா? புதுக் குடித்தனமாகவே வைப்பதானாலும் வாழமுடியாதா? மந்திரி எவரும் இதுபற்றிப் பேசமாட்டேன் என்கிறாரே? நமக்கு என்ன மற்றவன் தயவு வேண்டுமா? உட்கார்ந்த இடத்திலேயே கம்பியின்மூலம் வியாபாரம் செய்துவிடலாம். நீ (வடவர் ஆட்சி) என்ன அய்யன்—வர்த்த கத்துக்கு உதவிசெய்ய? இதைப்பற்றிச் சப்தம் போட ஆளில்லை; நான் சப்தம் போடவேண்டியது; அது செல்வாக்கைப் பெற்றதும் அதை வயிறு வளர்க்க உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டியது சிலரது வேலை யாக உள்ளது. இது என்ன நியாயம்?

("பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்", பக்கம் — 734



# தந்தை செல்வா சிந்தனைகள்

"தமிழ் இனம் தான் விரும்பிய விடுதலையைப் பெறுவதற்கு முதற்படியாகத் தன்னைத்தான் தூய்மைப்படுத்தி ஒற்றுமைக்குரல் எழுப்ப வேண்டும்". ... ... ....

"அரசியல் துறையில் தமிழ் மக்கள் இலங்கையில் அழிந்து போகாமல் தப்பிப் பிழைப்பதற்குச் சீவமரணப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பெரும்பான்மைச் சமூகம் தங்களை அடக்கி, ஒடுக்கி வருவதாகத் தமிழ்ச் சமூகத்தினர் குரல் எழுப்புகிறார்கள். தமிழ்ச் சமூகத்துள் ஒரு பிரிவினர் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் வரையில், தமிழ் மக்கள் பெரும்பான்மையினருடைய அடக்குமுறையைத் தாம் முறியடித்து வெற்றி காண்போம் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், நம்முள் ஒரு சாராரை நாமே இப்பொழுதும் அடக்கி-மடக்கி வைத்திருக்கிறோம். இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாய் இருக்கும்வரை, எப்படி நமக்கு அரசியல்போராட்டத்தில் வெற்றி கிடைக்கும்?" ... ... ... ...

"இன்று குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்தியத் தமிழரைத் தாக்கும் அரசாங்கம், நாளை மொழிச் சட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கு உலைவைக்கும். "தற்போது தமிழ் இனத்தைச் சிங்கள இராச்சியமே ஆண்டுகொண்டிருப்பதுடன், தமிழ் இனத்தைப் பலவீனப்படுத்தவும் அது முயல்கிறது. உதாரணமாக, உங்களது மாகாணத்திலேயே அரசாங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கல்லோயாத் திட்டத்தைப் பாருங்கள்! அங்கே கூடியசீக்கிரமே சிங்களவர் குடியேற்றப்படுவார்கள். இது தமிழருக்கு நன்மை செய்யவல்ல; அவர்களது உரிமைகளைப் பறிமுதலாக்கவேதான்."............

"இனிமேல் சிங்கள அரசாங்கங்களை நம்பிப் பயன் இல்லை. பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒப்பந்தங்கள் செய்து, ஒத்துழைப்பு வழங்கியும் பார்த்துவிட்டோம். இனி எமக்குள்ள ஒரே ஒரு வழி—தமிழ் ஈழம் அமைப்பதே." ............

"தனிநாடு அமைப்பது வில்லங்கமான காரியம்தான்" ஆனால் தமிழ் இனம் தப்பிப் பிழைக்க வேண்டுமெனின் இதைவிட வேறு வழியில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழக வரலாறு : சங்க காலம்

*(கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை)*

**பேராசிரியர் : இரா. மதிவாணன்**

தமிழகத்தின் தெளிவான வரலாறு கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவில் தொடங்குகிறது. தமிழ் பிராமி எனப்படும் தமிழி எழுத்திலமைந்த குகைக் கல்வெட்டுகள் இக்காலத்திலிருந்து கிடைத்துள்ளன. கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்திய தமிழ்க் கல்வெட்டுகள் எவையும் கிடைக்கவில்லை. இக் காலகட்டத்தில் வாழ்ந்த கிரேக்கத் தூதுவர் மெகசுதனிசு பாண்டியநாட்டில் பெண்ணரசி ஆட்சி புரிந்து கொண்டிருந்தாள் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தொன்முது இலக்கியங்களாக நமக்குக் கிடைத்துள்ள பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய கடைக்கழக நூல்களும் கி.மு, மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை. தொல்காப்பியம் ஒன்று மட்டும் கி.மு. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது. கடைக்கழக நூல்களைச் சங்க நூல்கள் என்று கூறுவது மரபு.

இயல், இசை, நாடகம் என முத்தமிழ் வளர்ப்பதற்காகத் தென்பாண்டிய மன்னர்கள் அடுத்தடுத்து மூன்று தமிழ்க்கழகம் (தமிழ்ச்சங்கம்) நிறுவினர்.

## மூன்று தமிழ்க்கழக வரலாறு

பாண்டியர்கள் நிறுவிய மூன்று தமிழ்க்கழகங்களைப் (சங்கங்களை) பற்றிய வரலாறு இறையனார் களவியல் என்னும் நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த குமரவேளும், முரஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்பதின்பர் பாடினார் என்ப.

அவர்களால் பாடப்பட்டன எத்துணைபோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்பது. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்பர். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப.

இனி, இடைச்சங்கம் இருந்தார், அகத்தியனாரும், தொல்காப்பியரும், இருந்தையூர் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்து ஒன்பதின்மர் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப.

அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்தேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்மதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனிக் கடைச்சங்கமிருந்து மிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடைய னாரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திருமாற னும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிள நாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத்தொடக்கத்தார் நாற்பத்து ஒன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற் பத்து ஒன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந் தொகை நானூறும், நற்றிணை நானூறும், புற நானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற் றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக் தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பிய மும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக் கிரப்பெருவழுதி ஈறாக நாற்பத்து ஒன்பதின்மர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப''

மேற்கண்ட இறையனார் களவியல் நூலில் கூறப்படும் முச்சங்க வரலாறு கால அளவில் கேட் போர்க்கு மிகையாகத் தோன்றினாலும் கடல்கோள் களால் குமரிக்கண்டத்தின் பகுதிகள் கடலில் மூழ்கிய பின்னரும் பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள் என்னும் உண்மையை அறியலாம்.

கடைச்சங்ககாலம் 1850 ஆண்டுகள் என்று கூறப் பட்டுள்ளது. நமக்குக் கிடைத்துள்ள சங்க நூல்கள் கி. மு. 300-க்குப் பிறகு 500 ஆண்டுக்கால அளவில் தோன்றியவை. கி.மு. 300 ஆண்டுக்கு முன்பு 1500 ஆண்டுகளாகக் கடைச்சங்கத்தில் உருவான நூல்கள் என்னவாயின என்பது தொடர்பாக நமக்கு எந்தக் குறிப்பும் கிடைக்கவில்லை. தமிழகத்தை ஆட்சி புரிந்த மன்னர்களின் விளக்கம் கூடக்கிடைக்கவில்லை கங்கை ஆற்றில் பொன்னைப் புதைத்து வைத்த நந்த ரைப்பற்றியும் தென்னாட்டின் மீது படையெடுத்த மௌரியர்களைப் பற்றியும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஆயின் கி. மு. மூன்றாம் நூற்றாண் டுக்கு முன்பு வடநாட்டில் ஆட்சி புரிந்த சிசுநாகர், லிச்சவி போன்றவர்களைப் பற்றியோ, ஈரானிய கிரேக்கப் படையெடுப்புகளைப் பற்றியோ ஒன்றும் கூறவில்லை.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பு தமிழக வரலாறு இருண்ட காலத்திற்குத் தள்ளப்பட்டிருப்ப தன் காரணம் படையெடுப்புகளோ கடல்கோள் களோ அல்ல. பல ஆண்டுகளாக மழை பெய்யாத தால் தோன்றிய கொடிய வறுமையே ஆகும்.

## 12 ஆண்டு மழை பெய்யாத வற்கடம்

கி. மு. 307இல் தென்னாட்டில் கொடிய வற் கடம் (பஞ்சம்) நிலவியதாகக் கிரேக்க வரலாற்றாசிரி யர்கள் குறிப்பிட்டுள்ளனர். இறையனார் களவியல் நூலும் தமிழ்நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பெய்யாததால் ஏற்பட்ட கொடிய வறுமைத் துன்பத்தைக் குறிப்பிடுகிறது. அது பின்வருமாறு,

''அக்காலத்துப் பாண்டியநாடு பனனீரியாண்டு வற்கடஞ் சென்றது; செல்லவே, பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாம் கூவி, வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு நாடு நாடாயின ஞான்று என்னை உள்ளி வம்மின்'' என்றான்.

தென்னாட்டில் கொடிய மழை வறம் (பஞ்சம்) ஏற்படுவதற்கு முன்பு வடநாட்டிலும் பல ஆண்டுகள் மழை பெய்யாத வறுமையால் மக்கள் மடிந்தார்கள். சமண சமயத்தைச் சார்ந்த மகத நாட்டரசர் சந்திர குப்தரும் பத்திரபாகு முனிவரும் 8000 சமணத்துறவி களுடன் தென்னாடு நோக்கி வந்து மைசூர் மாநிலத் தில் சிரவண பௌகுளாவில் தங்கினர். அவர்களில் விசாக முனிவர் தலைமையில் கி.மு. மூன்றாம் நூற் றாண்டில் பாண்டிய நாட்டுக்கு வந்த சமண முனி வர்கள் தமிழகத்தில் சமண சமயத்தைப் பரப்பினர். பௌத்த சமயம் அசோகரின் மகனால் ஈழம் வகை பரப்பப்பட்டது, எனவே சங்க இலக்கியங்கள் பெரும் பாலும் சமண பௌத்த சமயத்தைச் சார்ந்த தமிழ்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலவர்களால் பாடப்பட்டன. தமிழின் இலக்கண இலக்கிய மரபுகள் சிதையாமல் பாதுகாக்கப்பட்டன.

தொல்காப்பியப் புறத்திணைகளில் போரில் வென்ற அரசன் தோற்ற அரசனின் நகரத்தை இடித்துத் தரைமட்டமாக்குவதும் ஊர்களைத் தீவைத்து அழிப்பதும் கூறப்படவில்லை. ஆயின் கடைச்சங்கக் காலத்தில் ஆரியர்களின் வழக்கமாகிய ஊர்களைத் தீ வைத்து அழித்தல், நகரங்களை இடித்து நொறுக்குதல், அரசர்கள் பார்ப்பனர்களை வேதம் ஓதவைத்து வேள்வி செய்தல், இரணிய கருப்பம், துலாபார தானம் போன்ற வடநாட்டு வழக்கமாகிய கொடைகளை அளித்தல் ஆகியவை தமிழகத்தில் புகுந்துவிட்டன. சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் புகுவதற்கு முன்பே அதற்கு முந்தைய பல நூற்றாண்டுகளில் இவ்வழக்கங்கள் படிப்படியாகத் தமிழர்களிடையில் பரவியிருக்க வேண்டும்.

தொடர்ந்து 12 ஆண்டுகள் மழை பெய்யாததால் மக்கள் பல்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்ததும், ஆரியப் பழக்கவழக்கங்கள் மென்மெலப் பரவியதும், சமண பௌத்த சமயங்கள் தலையெடுத்ததும், கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்தைய வரலாற்றை இருண்ட காலமாக்கி இரண்டாம் தமிழ்ச் சங்க இலக்கியங்களின் மறைவுக்கு வழி வகுத்திருக்கலாம்.

## மூன்றாம் தமிழ்க்கழக இலக்கியங்கள்

கடைக் கழகமாகிய மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தில் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் மேற்கணக்கு நூல்களாகவும், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைப்பற்றிய நான்கு நூல்கள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்ச மூலம், கைந்நிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகவும் தொகுக்கப்பட்டன.

நான்கு அடிகளும் அதற்கும் குறைவான அடிகளும் கொண்ட பாடல்கள் கீழ்க்கணக்கு நூல்களாகவும் நான்கு அடிகளுக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்ட நூல்கள் மேற்கணக்கு நூல்களாகவும் தொகுக்கப்பட்டன.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தவிரப் பெருங்காப்பியங்கள் அனைத்தும் தனிப்பாடல்களே. அவையும் அரிதின் முயன்று, உக்கிரப் பெருவழுதி, யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை, பன்னாடு தந்த மாறன் வழுதி போன்றவர்கள் தூண்டுதலால் பெரும்புலவர்களால் தேடித் தொகுக்கப்பட்டவை.

நெடும் பாட்டுகளாக அமைந்தவை பத்துப் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுப் பத்துப்பாட்டு எனப் பெயர் பெற்றன. திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு என்னும் (நூற்றுக்கும் மேற்பட்ட வரிகளைக் கொண்ட) பத்து நெடும்பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. பழந்தமிழ் வேந்தர்கள்,புலவர்கள், பொது மக்கள் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டுச் செழுமையையும் இப்பாடல்கள் விளக்குகின்றன.

ஐந்தடி முதல் முப்பது நாற்பது அடிகளைக் கொண்ட பாடல்கள் எட்டுத்தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு எனப்பெயரிடப்பட்டன. இவற்றுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் பொதுவாழ்க்கையாகிய புறத்தைப் பற்றிப் பாடும் புறப்பாடல்கள்: ஏனையவை காதல் வாழ்க்கையைப் பாடும் அகப்பாடல்கள். தெய்வத்தைப் போற்றும் பரிபாடல் பாட்டுகளும் திருமுருகாற்றுப்படையும் தனி வகையைச் சார்ந்தவை. நமக்குக் கிடைத்திருக்கும் நூல்கள் அழிந்துபடாமல் காப்பதற்காகத் தொகை நூல்களாக அடைவு செய்யப்பட்டன. தமிழ்ப்பாடல்களை அழியாமற் காக்க வேண்டும் என்னும் பேரார்வம் தமிழ் வேந்தர்களிடம் முகிழ்த்தற்குக் காரணம் அதற்குமுன் கடல்கோள்களாலும் மழைபெய்யாத வறட்சிகளாலும் தமிழ் நூல்கள் மறைந்து போனதேயாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 245 கி. மு. 220

ங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் 25 ஆண்டு
ர நாட்டை ஆட்சிபுரிந்தான். இவனைக்
பாற்றுக் காப்பியனார் பதிற்றுப் பத்தில்
ள்ளார். மாமூலனார், கள்ளில் ஆத்திரைய
பான்ற புலவர்களும், திதியனும், ஒல்லையூர்
தப்பாண்டியனும் சோழன் நெய்தலங்கானல்
சேட் சென்னியும் இவன் காலத்தில் வாழ்ந்த
. மாமூலனார் மோரியர்களை 'வம்பமோரி
ன்று குறிப்பிட்டிருக்கிறார்.

## 220 — கி.மு. 100

மூலனார், கரிகால் வளவனும் பெருஞ்சேர
ம் போர் புரிந்ததைப் பாடியிருக்கிறார். ஆத
களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலுக்கும்
றக்கோட்டிய செங்குட்டுவனுக்கும் இடைப்
காலத்தில் கி.மு. 220 முதல் கி.மு. 200 வரை
ட்டைப் பெருஞ்சேரலாதனும் சோழ
டக் கரிகால் வளவனும் ஆண்டிருக்க வேண்
ன்று தெரிகிறது. தொல்பரணரால் பாடப்
உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி, கரிகால்
னுக்கு முன்பு நார்முடிச் சேரலின் காலத்தில்
நாட்டின் ஒருபகுதியை நெய்தலங்கானல்
சேட்சென்னிக்குப் பிறகு ஆண்டிருத்தல்
டும். இரும்பிடர்த்தலையாரால் பாடப்பட்ட
க ஒள்வாட் பெரும்பெயர் வழுதியும் இவன்
தில் வாழ்ந்தவனாகாலாம். கரிகாலனைப்
முடத்தாமக் கண்ணியார், ஒரம் போகியார்
பார் சம காலத்தினர்.

## 200—கி. மு. 180

பருஞ்சேரலாதன் மகன் குடக்கோ நெடுஞ்சேர
ா 20 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன்
பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியுடன் போர்
தைக் கழாத்தலையார் பாடியுள்ளார். கழாத்
பாரை இகழ்ந்ததற்காகக் கருநாடக மாநிலத்
ற்றரையம் பேரரையம் என்னும் பகுதிகளை
புரிந்த இருங்கோவேள் மரபு அழிந்ததாகக்
படுகிறது. ஈழத்தில் ஏலேல சிங்கன் ஆட்சி
காலமும் இதுவாகும்.

## 180—கி. மு. 125

டல் பிறக்கோட்டிய வேல்கெழுகுட்டுவன்
ாட்டை 55 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.
இவனைப் பரணர் பாடினார். உறையூர்ச் சோழன் தித்தன் அவன் மகன் போர்வைக் கோப் பெருநற் கிள்ளி, நன்னன்சேய் நன்னன், நன்னன் மீது மலைபடுகடாம் பாடிய இரணிய முட்டத்துப் பெருங் கௌசிகனார், ஆதிமந்தி, ஆட்டனத்தி, பேகன், மோகூர்ப்பழையன், பசும்பூண் பாண்டியன், மதுரைக் கணக்காயனார், ஈழத்துப் பூதன் தேவனார் ஆகியோர் இக்காலத்தில் வாழ்ந்தவர்கள்.

## கி.மு. 125—கி.மு.87

ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் சேரநாட்டை 38 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனைக்காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடியிருக்கிறார். இவன் காலத்தில் தொண்டியிலிருந்து ஆட்சி புரிந்த சேரன் அந்துவஞ் சேரல் இரும்பொறை, உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரால் பாடப்பட்ட முடித் தலைக் கோப்பெருநற் கிள்ளியும் ஆய் அண்டிரனும் இக்காலத்தவர்கள்.

## கி.மு.87—கி.மு.62

செல்வக்கடுங்கோ வாழியாதன் சேரநாட்டை 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனைப் பாடியவர் கபிலர். மாந்தரஞ்சேரல் இரும்பொறை தொண்டி யிலிருந்து அரசாண்டான். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, தேர்வண் மலையன், பேரி சாத்தனார், பாரி, காரி, ஓரி, நள்ளி, எவ்வி, விச்சிக்கோ, மிளைக்கந்தனார், வண்பரணர், அம் மூவனார், நப்பாலத்தனார் ஆகியோர் இக்காலத்தில் வாழ்ந்தவர்கள்.

## கி.மு.62—கி.மு.-42

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறை சேரநாட்டை 20 ஆண்டுகள் ஆட்சி புரிந் தான். குறுங்கோழியூர் கிழார், கூடலூர் கிழார், பாண்டியன் நம்பி நெடுஞ்செழியன், பேரெயின் முறுவலார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், மாங்குடி மருதனார், கல்லாடனார், குடபுலவியனார், இடைக்குன்றூர் கிழார், அம்பர்கிழான் அருவந்தை ஆகியோர் இக் காலத்தில் வாழ்ந்தவர்கள். சேரமான் மாரி வெண்கோ இவன் காலத்தில் தொண்டியிலிருந்து அரசாண்டவனாவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கி.மு.42 — கி.மு.25**

பெருஞ்சேரலிரும்பொறை சேரநாட்டை 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனை அரிசில் கிழார் பாடினார். பாண்டியன் அறிவுடை நம்பி இவன் காலத்தவன். சேரமான் மாரிவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கானப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி ஆகிய தமிழக மூவேந்தர்களும் ஒரே இடத்தில் கூடியிருந்ததைக் கண்டு 'இன்றே போல்க நும்புணர்ச்சி' என ஔவை யார் மூவேந்தர்களுடைய ஒற்றுமையுணர்வைப் பாராட்டியிருக்கிறார். அதியமானை வென்ற பெருஞ் சேரலிரும்பொறை தகடூரைத் தன்னாட்டுடன் இணைத்துக்கொண்டான். மருதனிள நாகனார், நன்னாகனார், ஒய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாடிய நல்லூர் நத்தத்தனார் ஆகியோர் இவன் காலத்தவர்கள்.

மோசி கீரனார், பொன்முடியார், கொண் கானங்கிழான் நன்னன், கரும்பனூர் கிழான், நாஞ் சில் வள்ளுவன் ஆகியோர் இக்காலத்தைச் சார்ந்த வர்கள்.

திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் கி. மு. 31 இல் பிறந்தவராகக் கணிக்கப்பட்டுள்ளது.

**கி. மு. 25 — கி. மு. 9**

இளஞ்சேரல் இரும்பொறை சேரநாட்டை 16 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனைப் பெருங் குன்றூர் கிழார் பாடியிருக்கிறார். பாண்டியன் பழையன்மாறனும் கோப்பெருஞ்சோழனும் இவன் காலத்தவர்கள். பிசிராந்தையார், பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார் ஆகியோரும் இக்காலத் தில் வாழ்ந்தவர்கள்.

**கி. மு. 9 — கி. மு. 1**

கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை எட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். ஆவூர் மூலங்கிழாரால் பாடப்பட்ட பாண்டியன் கீரன்சாத்தன் இவன் காலத்தவன்.

**கி.பி.1—கி.பி.20**

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் 19 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனுக்கு முன்பு வாழ்ந்த நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் ஒரு குடிப் பிறந்தவர்களாக இருந்தும் போர்க்கோலம் கொண் டிருப்பது தவறு எனக் கோவூர் கிழார் கடிந் தார். நலங்கிள்ளியின் தம்பி மாவளத்த பாடிய தாமப்பல் கண்ணனார், ஐயூர் முட ஆவூர் மூலங்கிழார், ஆலத்தூர் கிழார், ம கத்து நப்பசலையார், இடைக்காடனார், ஆ மாசாத்தனார், வெள்ளைக்குடி நாகனார் ஆ இக்காலத்தில் வாழ்ந்தவர்கள்.

**கி.பி. 21 — கி. பி. 42**

குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமா 21 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். சேரன் குட் கோதையும், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிகி பாடப்பட்ட வெள்ளியம்பலத்துத் துஞ்சிய வழுதியும் இவன் காலத்தவர்கள்.

**கி.பி. 42 -- கி.பி. 100**

சோழன் செங்கணான், சோழன்நல் திரன் ஆகியோர் இக்காலத்தில் ஆட்சிபுரிந் சேரமான் கணைக்காலிரும் பொறை, இளங் ரக்கோ, இளவிச்சிக்கோ, கோக்கோதைமா குமணன், பெருஞ்சித்திரனார், பொய்கை மருத்துவன் தாமோதரனார், பாண்டியன் இ திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறன், நக்கீரனார், சாத்தனார் ஆகியோர் இக்காலத்தில் தவர்கள். பாண்டியன் நன்மாறன் இக்கால கலித்தொகையைத் தொகுப்பித்தான்.

**கி.பி.101 — கி.பி.120**

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய மாறன் 20 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இ மாடத்தில் புரிந்த போர் புகழ்வாய்ந்தது.

**கி.பி. 120 — கி.பி. 144**

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். ஆரியப்படை மூவேந்தர்களும் தொடர்ந்து எதிர்த்தா என்பதைக் காரவேலனின் அத்திகும்பா கல்வெ குறிப்பிடுகிறது.

**கி.பி. 145 —கி.பி. 175**

பாண்டிய நாட்டை வெற்றிவேற்செழ 21 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். புகழ்பெ சிலப்பதிகாரக்கதை நடைபெற்ற காலமிது. செங்குட்டுவன், இலங்கை மன்னன் கய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாவண்கிள்ளி ஆகியோர் இக்காலத்தில்
னர்.

## 5 — கி.பி. 200

றிணையைத் தொகுப்பித்த பாண்டியன்
வழுதியும் ஐங்குறு நூறு தொகுப்பித்த
யானைக்கட்சேயும் இக்காலத்தில் வாழ்ந்
.

## கி.பி. 175 — கி.பி. 225

குறுந்தொகை தொகுப்பித்த பூரிக்கோவும், கடைக்கழக இலக்கியங்கள் பலவற்றைத் தொகுப்பித்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் இக்காலத்தில் வாழ்ந்தனர்.




## 5 — கி. பி. 300

250 முதல் கி.பி. 275 வரை வரகுண
னும் கி.பி. 275 முதல் கி.பி. 300 வரை
வாசகர் காலத்தில் வாழ்ந்த பாண்டியன்
னும் பாண்டியநாட்டை ஆட்சி புரிந்தனர்.

நாட்டு அரசனாகிய காரவேலனின் அத்தி
கல்வெட்டு 236 ஆண்டுகளாகத் தமிழ்

மூவேந்தர்களிடை ஒரு உடன்படிக்கை நிலவியது என்றும் அதன்படி அவர்கள் ஆரியப் படைகளைக் கூடி நின்று எதிர்த்தார்கள் என்றும், அந்த உடன்படிக்கை முறிந்தபின் தமிழரசர்களை வடநாட்டு அரசர்களால் எளிதில் வெல்ல முடிந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

கடைக்கழகக் கால முடிவுக்குப் பின் களப்பிரர் காலம் தொடங்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாவாணரின் - தமிழ்த்தொண்டு

பேரா. இரா. மதிவாணன்.

ஒன்றே செய்தலும் வேண்டும் ஒன்றும் நன்றே செய்தலும் வேண்டும் என்னும் பொன்மொழிக் கிணங்க மொழியாராய்ச்சி ஒன்றையே தம் வாழ் நாள் பணியாகக் கொண்டு மொழியாராய்ச்சியில் ஞாயிறாய் விளங்கி "மொழிஞாயிறு" என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவர், ஞா. தேவநேயப் பாவாணர். இம்மாதம் 7ஆம் நாள் அந்தச் செந் தமிழ்ச் செம்மலின் 88ஆவது பிறந்தநாள், மொழி நூல் மூதறிஞரின் வெள்ளணி நாள்.

நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட பெருமக் களை நாம் நன்றியுடன் நினைவுகூருவது போல மொழி விடுதலைக்காகப் பாடுபட்ட பாவாணருக் குத் தமிழுலகம் அவர் பிறந்த நாளில் நன்றிக்கடன் செலுத்துகிறது.

பாவாணரால் தமிழ்மொழி பெற்றுள்ள பயன் அளத்தற்கரியது; எவரும் வியந்து போற்றற்குரியது. பாவாணரின் புலமைத்திறத்தைக் கண்டு மாண்பு மிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சொற் பிறப்பியல் உருவாக்கும் திட்டத்திற்கு இயக்குநராக அமர்த்திப் பெருமைப்படுத்தினார். தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, ஒப்பியன்மொழி நூல், முதல்தாய்மொழி, சொல்லா ராய்ச்சிக் கட்டுரைகள், திரவிடத்தாய், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், பழந்தமிழர் விளை யாட்டுகள், இசைத்தமிழ்க் கலம்பகம், வள்ளுவரின் கூட்டுடைமை, திருக்குறள் தமிழ்மரபுரை போன்ற சிறந்த நூல்களைப் பாவாணர் தமிழ் மொழிக்குப் படைத்தளித்திருக்கிறார்.

தமிழில் புகுந்த அயன்மொழிச் சொற்களை அறவே களைந்து தனித்தமிழில் எழுதவும், பேசவும் வழிவகுத்துக் கொடுத்த பாவாணரைத் 'தமிழ் மீட்பர்' என்றே கூறலாம். தனித்தமிழ்க் காப்பு, வேர்ச் சொல்லாராய்ச்சி, ஞாலமுதன் கொள்கை ஆகிய முப்பெரும் பணிகளில் வா எல்லாம் மூண்டு கிடந்த உழைப்பாளர் அவ

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்ப் சிரியராகவும், அண்ணாமலை பல்கலைக்க வாசகராகவும், செந்தமிழ்ச் சொற்பிறப்பிய முதலித்திட்டத்தில் இயக்குநராகவும் பல்வே களில் பணியாற்றிய பாவாணரைத் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த நக்கீர போற்றிபுகழ்ந்தது. முப்பதுக்கும் மேற்பட் நூல்களும், நூற்றுக்கும் மேற்பட்ட ஆ கட்டுரைகளும் எழுதி வெளியிட்டார். ம யடிகள் சமயச் சொற்பொழிவாலும், இலக்கியச் சொற்பொழிவாலும், மக்களை தனர். ஆனால், பாவாணர் வெறும் ராய்ச்சிகளைப் பற்றியே பேசியும் மக்களைக் கவர்ந்துவிட்டார். பாவாணர் நாடெங்கும் தமிழ் மன்றங்கள் தே பற்றாளர் கூட்டம் பெறுகிறது. இலக் கணக்குப் பாடமும் இனிப்பில்லாதவை கள். ஆனால் இலக்கணத்தின்பாற்பட்ட ரின் சொல்லாராய்ச்சிகள் மறைந்துகிடந்த களை ஊற்றாகப் பெருக்கி வெளிக்கொணர் தேனை மொய்க்கும் ஈக்களைப்போலப் பா ஆராய்ச்சி உண்மைகளைத் தமிழன்பர்க மலர்ந்து முகம் மலர்ந்து, விரும்பிக டனர். அவருடைய நூல்களை வதற்குத் தமிழ் மன்றங்கள் பணம் கொடுத்தன. மராட்டியப் பேராசிரியர் நான் இந்தச் செய்தியைச் சொன்னபோ மூக்கின்மேல் விரல் வைத்துக்கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ய்ச்சி செய்த பேராசிரியருடைய நூல்களை பிடப் பொதுமக்கள் முன் வந்தார்களா? ம் இதுவரை கேள்விப்பட முடியாத செய்தி வியந்தார். அவர் பாவாணரைப் பார்த்துப் ம் விரும்பினார்.

மிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி. ஒரு மொழி தனிச் செம்மொழியாக வளர்கிறது என்றால் யிரம் புலவர்களின் உழைப்பு அதில் அடங்கி கிறது என்று பொருள். தமிழ்மொழியின் மையைப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பேணிக் மேன்மேலும் வளப்படுத்திய பெரும் புலமை களுள் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் ணர் தன்னேரிலாதார். பாவாணரின் தமிழ்த் ன்டு தனிப்பாங்குடையது. அதனால்தான் ணரின் தமிழ்த்தொண்டைத் தெளிவாகவும் மாகவும் விளக்க நினைத்துப் பாவலரேறு ந்சித்திரனார் தொல்காப்பியத்திற்குப்பின் தமிழ் படுத்திக் கொள்வதற்காகச் செய்த ஒட்டு மொத்த முயற்சிக்குப் "பாவாணர்" என்று பெயரிடலாம்; சிறப்பித்தார். தமிழுக்கெனப் பிறந்து, தமிழுக் வளர்ந்து தமிழுக்கென வாழ்ந்து, தமிழுக் உழைத்துத் தமிழாகவே தோற்றம் அளிப் இவர் என்றும் சிறப்பித்தார்.

சால்லாராய்ச்சித் துறையில் முதன்முதலாக செய்து அரிய கண்டுபிடிப்புகளை நல்கியவர் ணர். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித் வ' என்று தொல்காப்பியர் கூறினார். அத பாவாணர் மெய்ப்பித்தார். ஒவ்வொரு சொல் ாந்த வேர் மூலத்திலிருந்து பிறந்தது என்பதைத் வாக வரையறுத்திருக்கிறார். உலக முதல் ழி எப்படித் தோன்றியது? ஒவ்வொரு சொல் எப்படி பிறந்தது? எப்படித்திரிந்தது என்பவை டர்பான மொழிநூல் உண்மைகளைப் ணர் அழகாக விளக்கிக் காட்டியிருக்கிறார். ய மொழிகளிலேயே ஒன்றில்தான் தமிழ் பிற ல் கலக்காமல் பேசமுடியும் என்பதை நிறுவிக் டுவதற்காகத் தனித்தமிழில் எழுதுதல், தனித் லேயே பேசுதல் என்னும் குறிக்கோளை வாழ் இறுதிவரையில் கடைப்பிடித்தார்.

வெளிநாட்டிலிருந்து உருளைக்கிழங்கு தமிழ் டில் இறக்குமதியானபோது அது உருண்டி ருப்பதை நோக்கி உடனே உருளைக்கிழங்கு எனப் பெயர் வைத்துவிட்டார்கள். தீக்கோழி வந்தபோது வான்கோழி என்று புதிய சொல் படைத்துவிட்டார்கள். நம் முன்னோர்கள் தமிழில் புகும் வேற்று மொழிச் சொற்களுக்கு உடனுக்குடன் ஏற்ற தமிழ்ச் சொற்களை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழில்சொல்படைக்க முடியாதபோது வேற்று மொழிச் சொற்களை ஏற்றுக்கொள்வது பொருந்தலாம். தமிழில் நல்ல சொற்கள் இருக்கும்போது பிற சொற்களை நாடுவது நல்லதல்ல என்பது பாவாணர் கருத்து.

தேசியப் பேராசிரியராக விளங்கிய திரு. சுனித் குமார் சாட்டர்சி அவர்களால் தொகுக்கப்பட்ட "The Critural Heritage of India" எனும் நூலின் ஐந்தாம் மடலத்தில் 'பாவாணரின் உழைப்பு தமிழ் மொழிக்குக் கிட்டாமலிருந்தால் தமிழ்மொழியின் தூய்மையும் தொன்மையும் வெளியுலகிற்குத் தெரியாமலே பழங்கதையாய்ப் போயிருக்கும்' என்னும் கருத்து "But for his efforts the purity and antiquity of the Tamil Language might have been a myth,' என்று கூறப்பட்டிருக்கிறது. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பாவாணர் பணியாற்றிய காலத்தில் திரு சாட்டர்சிக்கும் பாவாணருக்கும் கருத்து வேற்றுமைகள் இருந்தன என்றே நாம் அறிந்திருக்கிறோம். ஒரு காலத்தில் கருத்து வேற்றுமை கொண்டிருந்த சாட்டர்சி, பாவாணரைப் போற்றுமளவுக்குப் பாவாணருடைய கருத்துகளால் ஈர்க்கப்பட்டிருக்கிறார் என்பதை இது காட்டுகிறது. இங்கிலாந்துப் பேராசிரியர் பரோவும், கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் எமனோவும் பாவாணரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டியிருக்கிறார்கள். பாவாணருடைய நூல்களும், கட்டுரைகளும் வருங்காலத் தலைமுறைகளுக்குக் கலங்கரை விளக்கமாக அமைவன. பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் பாவாணருடைய நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஊன்றிப் படித்தால் இயல்பாகவே தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொள்ளலாம். 'தமிழில் ஆழ்ந்த புலமை பெறவேண்டுமா? பாவாணரின் படைப்புகள் அத்தனையும் படியுங்கள். அதுவே போதும் என முனைவர் தமிழ்க்குடிமகனார் கூறிய கருத்து முற்றிலும் உண்மையான கருத்தாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்நாடு பொருளாதாரம்

## வேளாண்மைப் பயிர்வளம்

திருமதி யாழினி இராஜேந்திரன், எம். ஏ. பொருளியல்

தமிழ்நாட்டில் 60.95 விழுக்காட்டினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆகையால், வேளாண்மைத் துறையை மேம்படுத்துவது இன்றைய நிலையில், தேவையான ஒன்றாகும். இன்றுள்ள நிலையில், தமிழ்நாட்டு மக்களின் முதன்மை உணவான அரிசிக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது மேலும், காய்கறி, பழவகைகள், போதிய அளவு கிடைப்பதில்லை. எனவே, தமிழ்நாட்டுத் தன்னிறைவுத் திட்டத்தில் கவனம் செலுத்தி, மக்களுக்குச்சத்துணவு கிடைக்கச் செய்வது இன்றியமையாப்பணியாகும்

**நீர்**

வேளாண்மைக்கு நீரும் நிலமும் அடிப்படையானவை. நீர் மழைவளத்தால் உண்டாவது படம் 1-ல் தமிழ்நாட்டில் மழை அளவைச் சித்திரித்துள்ளோம். அதில், இரு பிரிவுகள் உண்டு. ஒன்று, மழை இயல்பான வளம். மற்றையது 1985-86-ல் ஏற்பட்ட மழை வளம், இதன்படி, தமிழ்நாட்டில் பெரும்பாலான மழை வளம் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்படுகின்றது. இன்னும் ஒரு சிறு மழைவளம், ஏப்ரல், மே மாதங்களில் வருகிறது. பெருந்தொகையான காடுகள் அழிக்கப்படுவதால், மழை வளம் குறைகின்றது. இதனால், வனவளத்தல், தனிக்கவனம் செலுத்தியாக வேண்டியிருக்கிறது.

**நிலம்**

வளமான நிலம் இருந்தால்தான், நல்ல வேளாண்மை செய்ய முடியும். ஆகையால், நாடெங்கணுமுள்ள வளமான நிலங்களைத் தேடியெடுத்து, அவற்றுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி வேளாண்மையைப் பெருக்கவேண்டும். படம் 2-ல் தமிழ்நாட்டிலுள்ள நில அமைப்பைச் சித்திரித்துள்ளோம். 43.8 விழுக்காடு நிலம் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. 56,90,892 ஹெக்டேருக்கு 1985 / 1987 வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்று தமிழ்நாட்டில், சராசரி 6 கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்நிலையில், ஒவ்வொ வருக்கும் ஏறத்தாழ 1/10 ஹெக்டேர் நில உள்ளது குறைந்த அளவு, ஒவ்வொருவருக் 1/2 ஹெக்டேர் ஆயினும் இருக்கவேண்டுமென்ப ஒரு பொது விதி. வளர்ந்த உலகநாடுகளுட ஒப்பிட்டால், இந்நிலை மிகவும் வீழ்ச்சிப் பே கினையைக் காட்டுகிறது. புதிய முறைகளை கையாண்டு, விளைச்சலை உயர்த்துவது இன் யமையாததாகும்.

தமிழ்நாட்டில், காட்டு நிலம் 15. 9 விழுக்கா உள்ளது. சராசரி ஒவ்வொரு நாட்டிலும் 1/3 பா நிலம் காடாக இருக்கவேண்டுமென்பது பொதுவி தமிழ்நாட்டில் சரி அரைவாசியே காட்டு நிலம உள்ளது. ஆனால், 17.3 சதவிகித நிலம் தரிச உள்ளது. இந்நிலத்தில், காடுகளை அமைத்து, மள வளத்தைப் பெருக்கலாம். இதனால், பல நன்ள கள்ளயும் அடையலாம்.

தமிழ்நாட்டில், மேய்ச்சல் நிலம் 1.1 சதவிகித இது கால்நடை வளர்ப்புக்கு மிகவும் குறைவான தரிசு நிலங்களில், அமைக்கப்பட்ட காடுகளின் ஊ மேய்ச்சல் நிலங்களையும் அமைத்தால், கால்நன வளர்ப்பை மேம்படுத்தலாம்.

வேளாண்மைக்கு அல்லாத பயன்பாடுகளு 13.9 விழுக்காடு நிலம் பயன்படுத்தப்படுகின்ற இது மிகவும் பாதகமானது. தமிழ்நாட்டில் நகர மாக்கம் விரைவுபடுத்தப்படுகிறது. இதனால் நகர களைச் சூழ்ந்துள்ள நல்ல உழவு நிலங்கள் ந அமைப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. விரை இது தடுத்து நிறுத்தப்பட்டுச் சிக்கனமான ந அமைப்பு முறைகளைக் கையாண்டு வளமான நி களை வேளாண்மைக்கு ஒதுக்கப்படவேண்டும்.

தமிழ்நாட்டின் நீர்ப்பாசன வசதிகள் பட 4-ல் சித்திரிக்கப்பட்டுள்ளது. வாய்க்கா குளம், கிணறு, நீர் ஏறத்தாழ சரிசமனாய்ப் பய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்தப்பட்டுள்ளது. ஆயினும் மொத்தமாக 0,792 ஹெக்டேர் நிலமே நீர்ப்பாசனத்திற்கு ளாக்கப்பட்டுள்ளது. விளைநிலம் 56,90.892 க்டேர் பரப்பில் உள்ளது. ஆகையால், சரி ரவாசி பயிர்நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் லை. மாவட்ட அடிப்படையில் பயிர்ச்செய்கை பாசனம் படம் 4-ல் சித்திரிக்கப்பட்டுள்ளது. பாசன வசதிகளைப் பெருக்கி, விளைவை த்தத் தன்னிறைவு அடைய வேண்டும்.

தமிழ்நாட்டில், பயிர் வளர்ச்சியை ஆராய்ந்த அது நெல் கூடிய அளவும் நிலக்கடலை, பு குறைந்த அளவும் செய்யப்படுவதைக் டுகின்றது. மேலும் தானியங்கள் தமிழ்நாட் 4011,157 ஹெக்டேரில் செய்யப்படு றது. [நெல் 22,64,293 ஹெக்டேரில்— கடலை 9,32,049 ஹெக்டேரில், கரும்பு ,871 ஹெக்டேரில் செய்யப்படுகின்றது. தமிழ் டில் குறைந்த விலையில் தானிய உற்பத்தியைப் க்கி மக்களுக்கு சத்துணவைக் குறைந்த விலையில் கொடுக்க நல்ல வாய்ப்பு உண்டு. சிறப்பாகச் சத்துள்ள தானியங்களான பயறு, கடலை வகைகளைப் பெருக்குவதில் பெரும்பயன் தரும்.

தமிழ்நாட்டில் பயிர்வள நிலமையை விளக்கப் பல, பட்டியல்களைத் தந்துள்ளோம். இவற்றின் மூலம் தமிழ்நாட்டில் நெல், தானியம், பயறு, கடலை காய்கறி, பழம், யாவும் எவ்வளவு நிலப்பரப்பில் செய்யப்படுகின்றது என்பதைக் காணலாம்.

**பயிர் சராசரி விளைவு**

பட்டியலில் ஒவ்வொரு ஹெக்டேருக்கும் ஒவ்வொரு பயிரின் விளைச்சலைக் காட்டியுள்ளோம். இவ்விளைச்சலை வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாட்டு வேளாண்மை மிகவும் பின்தங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. நெல் விளைச்சலை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் ஹெக்டேருக்கு 4½ தொன்நெல் விளைகிறது. இந்திய அரசே ஹெக்டேருக்கு 9 தொன் விளைச்சலைக் குறிக்கோளாய் வெளிப்படுத்தியுள்ளது. நவீன அறிவியல் முறைகளைக் கையாண்டு விளைச்சலைக் கூட்டுவதே தன்னிறைவு காண்பதற்கு சிறந்த வழி.

**பழங்களும் காய்கறிகளும் 85/86 ஹெக்டேர்**

| | | | |
|---|---|---|---|
| வாழைப்பழம் | 59,305 | பீற்றூட் | 437 |
| மாம்பழம் | 39,275 | கத்தரி | 7,441 |
| பலாப்பழம் | 2,736 | வெண்டைக்காய் | 2:022 |
| அன்னாசி | 715 | பயறு | 1,650 |
| கொய்யா | 2,894 | கோவா | 1,627 |
| திராட்சை | 1,601 | தக்காளி | 10,832 |
| சிறுபழம் | 1,275 | வேறு காய்கறி | 6,344 |
| எலுமிச்சை | 4,849 | தென்னை | 1,67,411 (தென்னை) |
| வேறு | 1,001 | | 14,945,000 (தேங்காய்) |
| மரமுந்திரிகை | 65,952 | பாக்கு | 4,316 (மரம்) |
| உருளைக்கிழங்கு | 7,773 | | 41,90,836 (பாக்கு) |
| காரட் | 915 | | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நிலப்பரப்பு ஹெக்டேர் : சதவீதம்

| | 83/84 | ·/. | 84/85 | ·/. | 85/85 | ·/ |
|---|---|---|---|---|---|---|
| முழு நிலப்பரப்பு | 1,29,94,243 | (100) | 1,29,44,979 | (100) | 1,29,87,355 | (10 |
| காடு | 20,30,232 | (15.6) | 20,49,718 | (15.8) | 20,66,319 | (15. |
| வறண்ட நிலம் | 5,75,244 | ( 4.5) | 5,67,707 | ( 4.4) | 5,53,286 | ( 4. |
| பயிர் செய்ய முடியாத நிலம் | 17,95,524 | (13.2) | 17,91,430 | (13.2) | 17,98,774 | (13. |
| பயிர் செய்யக்கூடிய நிலம் | 3,16,722 | ( 2.4) | 2,98,883 | ( 2.3) | 2,94,939 | ( 2. |
| மேய்ப்பு நிலம் | 1,50,795 | ( 1.2) | 1,49,115 | ( 1.1) | 1,48,446 | ( 1. |
| மாந்தோப்பு | 1,83,324 | ( 1.4) | 1,84,129 | ( 1.4) | 1,89,499 | ( 1. |
| தரிசுநிலம் (இன்றைய) | 15,49,350 | (11.9) | 15,55,788 | (12,0) | 14,09,970 | (10. |
| தரிசு நிலம் (வேறு) | 5,47,964 | ( 4.2) | 6,09,897 | ( 4.7) | 5,35,230 | ( 6. |
| பயிர் நிலம் | 58,46,128 | (45.0) | 57,88,252 | (44.5) | 56, 90,892 | (43. |
| பயிர்நிலம் (பன்முறை செங்கை) | 10,98,831 | ( 8.5) | 12,97,957 | (10.0) | 11, 27,903 | ( 8. |
| முழுப் பயிர்நிலம் | 69,44,959 | (53 5) | 70,88,209 | (54.5) | 68,18,795 | (52. |

## பயிர் சராசரி விளைவு கி. கி/ ஹெக்டேர் முழு விளைவு

| | 83/84 | | 84/85 | | 85/86 | |
|---|---|---|---|---|---|---|
| | கி.கி/ஹெ.ஏ | தொன் | கி.கி/ஹெ.ஏ | தொன் | கி.கி/ஹெ.ஏ | தொ |
| அரிசி | 1,914 | 46,33,260 | 2,138 | 53,65,370 | 2,372 | 53,70,490 |
| கோதுமை | 432 | 290 | 410 | 350 | 423 | 380 |
| சோளம் | 680 | 5,27,570 | 766 | 5,25,940 | 1,057 | 7,74,55( |
| கம்பு | 934 | 3,21,030 | 992 | 3,19,740 | 1,215 | 3,71,640 |
| மக்காச்சோளம் | 2,473 | 40,160 | 1,764 | 27,890 | 1,858 | 28,800 |
| ராகி | 1,271 | 2,54,830 | 1,106 | 2,49,340 | 1,542 | 3,00,780 |
| சிறு தானியம் | 822 | 2,62,270 | 557 | 1,52,320 | 566 | 1,48,200 |
| தானியம் (முழு | 1,482 | 39,410 | 1,655 | 68,38,950 | 1,852 | 69,94,840 |
| வங்காளப் பயறு | (600 | 7,610 | 652 | 4,360 | 689 | 6,110 |
| சிவப்புப் பயறு | 631 | 57,690 | 67 | 50,900 | 891 | 71,750 |
| வேறு பயிறு | 313 | 1,56,280 | 362 | 1,93,430 | 401 | 1,97,360 |
| பயறு (முழு) | 367 | 2,21,580 | 403 | 2,48,690 | 473 | 2,75,220 |
| உணவுத் தானியம் (முழு) | 1,338 | 62,60,990 | 1,488 | 68,87,640 | 1,668 | 72,70,061 |
| மிளகாய் (காய்ந்த) | 770 | 48,810 | 675 | 48,240 | 7,67 | 59,250 |
| கரும்பு (சர்க்கரை) | 8,472 | 13,24,350 | 9,524 | 16,13,940 | 10,825 | 20,68,390 |
| உருளைக் கிழங்கு | 10,449 | 99,620 | 14,887 | 1,25,300 | 17,177 | 1,33,520 |
| பருத்தி (170கி.கி. மூட்டை) | 264 | 2,88,630 | 393 | 5,85,000 | 324 | 4,84,710 |
| நிலக்கடலை | 1,046 | 9,28,490 | 1,027 | 9,86,390 | 1,262 | 11,76,020 |
| எள்ளு | 324 | 33,080 | 358 | 35,670 | 401 | 45,610 |
| ஆமணக்கு | 409 | 3,850 | 144 | 5,020 | 316 | 4,190 |
| (புகையிலை உலர்த்தியது) | 1,063 | 11,540 | 2,095 | 25,710 | [illegible],390 | 18,330 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முழு பயிர் பரப்பு (ஹெக்டேர்)

| | 83/84 | 84/85 | 85/86 |
|---|---|---|---|
| ல் | 24,20,103 | 25,09,271 | 22,64,293 |
| ாதுமை | 671 | 853 | 907 |
| ாளம் | 7,75,387 | 6,86,515 | 7,31,602 |
| பு | 3,43,715 | 3,22,294 | 3,05,962 |
| காச்சோளம் | 16,246 | 15,813 | 15,505 |
| கி | 2,00,550 | 2,02,850 | 1,95,097 |
| று தானியம் | 3,18,912 | 2,73,571 | 2,61,693 |
| னியம் (முழு) | 40,75,584 | 40,11,157 | 35,76,079 |
| காளப் பயறு | 12,679 | 6,683 | 9,105 |
| ப்புப் பயறு | 91,483 | 76,270 | 80,499 |
| று பயறு | 4,98,957 | 5,34,853 | 4,92,664 |
| று (முழு) | 6,03,119 | 6,17,806 | 5,82,268 |
| னியப்பயறு (முழு) | 46,78,703 | 46,28,963 | 43,58,347 |
| ாகாய் | 63,402 | 71,502 | 80,162 |
| ஞ்சி | 1,848 | 1,639 | 1,675 |
| ம்பு | 1,56,316 | 1,69,468 | 1,91,071 |
| ளைக்கிழங்கு | 9,535 | 8,417 | 7,773 |
| ணவுப்பயிர் (முழு) | 53,13,384 | 53,04,203 | 50,53,439 |
| த்தி | 1,85,992 | 2,53,228 | 2,54,445 |
| ஸ்ரா | 161 | 167 | 132 |
| க்கடலை | 8,87,267 | 9,60,038 | 9,32,048 |
| ாளு | 1,02,177 | 99,760 | 1,13,744 |
| கு | 5585 | 558 | 817 |
| மணக்கு | 9,419 | 12,126 | 13,266 |
| பர் | 12,841 | 13,715 | 13,933 |
| கயிலை | 10,857 | 12,275 | 12,219 |
| ப்பி | 29,662 | 33,319 | 34,120 |
| யிலை | 39,886 | 40,794 | 40,903 |
| ணவில்லாத பயிர் | 3,52,728 | 3,58,026 | 3,48,646 |
| ,, ,, (முழு) | 16,31,575 | 17,84,006 | 17,65,165 |
| ம், உணவில்லாததும் (முழு) | 99,44,950 | 70,88,092 | 68,18,795 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நீர் வளம் (நீர்ப்பாசனப் பரப்பு (ஹெக்டேர்)

| | 83/84 | 84/85 | 85/86 |
|---|---|---|---|
| அரசு வாய்க்கால் | 6,64,646 | 8,95,977 | 7,73,82 |
| தனியார் வாய்க்கால் | 726 | 809 | ,6 |
| குளங்கள் | 8,07,069 | 7,15,029 | 6,71,72 |
| கிணறுகள் (ஆழ்கிணறுகளும்) | 9,25,440 | 10,07,405 | 10,2951 |
| வேறு | 21,203 | 20,132 | 25,11 |
| நீர்ப்பாசன முழுநலம் | 26,18,084 | 20,40,352 | 25,00,79 |
| அரசு வாய்க்கால் (எண்ணிக்கை) | 2,373 | 2,426 | 2,36 |
| அரசு வாய்க்கால் (நீளம் கி, மீ.) | 12,598 | 12,501 | 12,52 |
| தனியார் வாய்க்கால் (எண்,) | 11 | 12 | 1 |
| தனியார் வாய்க்கால் (நீளம் கி.மீ.) | 34 | 35 | 3 |
| ஆழ்கிணறு அரசு | 4,266 | 4,316 | 4,29 |
| ஆழ்கிணறு தனியார் | 58,841 | 54,435 | 58,60 |
| அரசு கிணறுகள் (கல் கட்டு) | 2,979 | 2,045 | 471 |
| அரசு கிணறுகள் (கட்டில்லாமல்) | 3,617 | 307 | 27 |
| தனியார் கிணறுகள் (கல்கட்டு) | 14,05,132 | 14,15,658 | 14,30,83 |
| ,, ,, (கட்டில்லாமல்) | 2,30,415 | 2,39,418 | 2,39,44 |
| வீட்டுக் கிணறுகள் | 5,09,032 | 5,03,118 | 5,38,81 |
| உபயோகமில்லாத கிணறுகள் | 83,362 | 81,831 | 82,71 |
| குளங்கள் (பெரிய) | 48 | 49 | 4 |
| குளங்கள் 40 ஹெக்டேர் | 7,125 | 6,191 | 6,22 |
| ,, 40 ஹெக்டேர் | 30,591 | 30,438 | 30.42 |

## நீர்ப்பாசனப் பயிர் பரப்பு (ஹெக்டேர்)

| | 83/84 | 84/85 | 85/86 |
|---|---|---|---|
| நெல் | 21,95,994 | 23,30,893 | 20,81,262 |
| கோதுமை | 78 | 103 | 47 |
| சோளம் | 80,877 | 72,575 | 65,424 |
| கம்பு | 47,948 | 46,242 | 42,671 |
| ராகி | 13,911 | 13,455 | 12,265 |
| வேறு தானியம் | 70,853 | 64,893 | 57,052 |
| வேறு தானியம் | 1,832 | 2,886 | 1,150 |
| வங்காளப் பயறு | 587 | 249 | 343 |
| சிவப்புப் பயறு | 988 | 947 | 574 |
| வேறு பயறு | 15,471 | 18,262 | 20,704 |
| கரும்பு | 1,56,242 | 1,69.421 | 1.90,896 |
| வேறு பயிர் (உணவு) | 2,03,312 | 3,29,278 | 2,22,865 |
| **உணவல்லாத பயிர்கள்** | | | |
| புகையிலை | 10,835 | 12,265 | 13,171 |
| பருத்தி | 84,656 | 1,293,87 | 1,26,891 |
| நிலக்கடலை | 2,40,275 | 2,88,110 | 2,62,459 |
| எள்ளு | 27,750 | 19,736 | 21,760 |
| | 675 | 841 | 776 |
| மேய்ச்சல் பயிர் | 5,376 | 4,329 | 7,230 |
| உணவல்லாத வேறுபயிர் | 92,588 | 1,02,835 | 1,12,258 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 1




படம்-2.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






www.tamilarangam.net



# தமிழீழத்தில் இந்தியாவின் இன்றைய நிலை

ச. அ. டேவிட், தலைவர், காந்தீயம் இலங்கை

7-ல் ராஜீவ்காந்தி ஆடம்பரமாயும், ஆணவத் ம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நிறை னார். அதையடுத்துச் சென்னை மெரினா ரையில் ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் திலும் பார்க்க மேலாய்க் கொடுத்து ன் என்று கொக்கரித்தார். பொய், ஊழல், ஆணவம், அராஜகம் யாவிலும் பிருந்த ராஜீவ்காந்தி 1989-ஆம் ஆண்டில் மத்திய மக்கள் சபைத் தேர்தலில் தோற் ப்பட்டார்.

ந்தக் கோரக்காட்சியின் பின்னணியில் ழத்தில், இந்தியாவின் இன்றைய நிலையை ப்வோம்.

989 ஆம் ஆண்டு இந்தியத் தேர்தலில் வி. பி. வெற்றி கண்டார். இவர் ராஜீவ்காந்திக்கு மாறான குணங்களைக் கொண்டவர் என்றும், ான அடிப்படை மாற்றங்கள் ஏற்படுமென் பலர் எதிர்பார்த்தனர்.

ஆயினும், வி. பி. சிங்கின் அரசு சிறுபான்மை என்பதும், பெரும்பான்மை ஆதரவினாலேயே நடத்துகிறது என்பதும் ஆழமாய் ஆராயப் வண்டியவை. பாரதீய ஜனதாக்கட்சி ஓர் தீவிர , சமயவாதக் கட்சி என்பதும், இந்திய மக்கட்சி ஓர் சந்தர்ப்பவாதக் குழுவென்பதும் ஆராயப்படவேண்டும்.

ஞ்சாப், காஷ்மீர், நேபாளம், இலங்கை ாரங்களில் ஆழ்ந்த அடிப்படை மாற்றங்கள் டுவதாய்த் தோன்றவில்லை. வி பி. சிங்கின் யில் இரண்டும் கெட்டான் நிலையில் சீரழிவு டுவதே முதல் தோற்றமாய் இருக்கிறது.

அடுத்து வி.பி. சிங் தமிழக முதல்வர் கருணா தத் தமிழீழ விவகாரத்தில் பொறுப்புகள் கொடுத்து பிரச்சினையைத் தீர்த்து வைக்க அவரைக் கேட்டுக்கொண்டார். தமிழக முதல்வர் தந்திரோ பாயங்களைப் பாவித்து, தமிழீழப் புலிகளுடன் பேச்சுசுகளை முடித்துக் கொண்டு பிரச்சினை மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்று கைவிரித்து விட்டார்.

வி பி, சிங் கோபம் தாங்க முடியாமல் பகிரங்க மாகக் கலைஞர் கருணாநிதிக்கு எச்சரிக்கை விடுத்து ஏனைய தமிழீழக் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த உத்தரவிட்டார்.

வெட்கத்தைக் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு கலைஞர் கருணாநிதி வரதராசப் பெருமாளைக் கட்டியரவணைத்துப் பேச்சுக்களை நடத்தினார்.

கலைஞரிடம் எவரும் பிழை காணமுடியாது. ஏனெனில் அவர் தம் நிலையை என்றாவது மக்க ளுக்கு அறிவித்தது இல்லை. திரைமறைவில் திருவிளையாடல் ஆடி முடித்துக் கொண்டார்.

அடுத்து மாதக்கணக்கில் வரதராசப்பெருமாள் தில்லியில் மண்டியிட்டுக் கிடந்தார். தமிழீழத்தில் இந்தக் காலத்தில் புலிகள் அட்டகாசம் செய்து இந்தியப்படை விட்டு வெளியேறிய இடங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொண்டது. இலங்கை இராணுவம் தமிழீழப் புலிகளுக்குத் தீவிர ஒத்துழைப்புக் கொடுத்தது. இலங்கை அரசு, சட்டம் ஒழுங்கு எல்லாவற்றையும் பொருட்படுத்தாது புலிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துத் தமிழின ஒழிப்புக்கு வழிவகுத்தது.

தமிழீழ மக்களின் பாதுகாப்பும், அதிகாரப் பங்கீடும் தாம் பிரதம குறிக்கோள் என்று வி.பி. சிங்கின் அரசு தம்பட்டமடித்துக் கொண்டே படிப் படியாய் மார்ச் 31ஆம் தேதிக்குள் இந்திய இராணு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வத்தை இலங்கையிலிருந்து விலக்கிக்கொள்ளப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியப்படை இலங்கை மண்ணிலிருந்து வெளியேறியதும், இந்தியாவுக்கு இலங்கை அரசையோ, தமிழீழப் புலிகளையோ எவ்விதத்திலும் நிர்ப்பந்தப்படுத்த முடியாது, இந்திய உளவுத்துறையால் உருவாக்கப்பட்டு பதவியில் திணிக்கப்பட்ட தமிழ் தேசிய இடக்கமும், இராணுவமும் இந்திய இராணுவத்துடனேயே கப்பல் ஏறப்போகிறது.

இலங்கையில் இந்திய முயற்சி யாவும் படுதோல்வி காண்பது உறுதியாகிவிட்டது. தமிழீழ மக்கள் தமிழீழப் புலிகளின் தயவிலும் சிங்களப் பேரினவாதத்தின் மேற்பார்வையிலும் சிக்கித் தவிக்க வேண்டிய கட்டம் உருவாகியுள்ளது.

ராஜீவ்காந்தியுடைய கேலிக்கூத்துக்குத் தம்பட்டமடித்து மூடுவிழா நடத்துவதே வி.பி. சிங்கின் பொறுப்பாகிவிட்டது.

இந்தியக் கடற்பரப்பில் சிறுபான்மைகளுக்குத் துணை நிற்கும் இந்தியப் போலித் தோற்றம் அம்பலமாகிவிட்டது. இந்து சமுத்திரத்தில் சிறு இனங்களை அடக்கியொடுக்கி இந்திய ஆதிக்கத்தைக் காப்பாற்றும் கபட நாடகம் வெளிப்படையாகியுள்ளது. தமிழ்ப் பிரச்சினையை முன்வைத்து இலங்கை அரசை ஆட்டிப்படைக்கும் நப்பாசையில் இந்தியா ஓர் புது இந்திய இலங்கை நட்புறவு ஒப்பந்தத்தைத் தயாரித்திருக்கிறது. ஆனால், இலங்கை அரசு இந்த ஒப்பந்தத்தில் அக்கறை காட்டவில்லை. இதனால் இந்தியாவுக்குத் தர்ம சங்கடம் ஏற்பட்டுள்ளது.

ஒரு பேரினம் தன் பண பலத்தால், படை பலத்தால், அரசியல் பலத்தால், சிறுபான்மை இனங்களை அடக்கியாள்வது சரித்திரத்தில் பல தேசங்களில் பல காலங்களில் தோன்றியுள்ளது. ஆனால், அராஜகத்தை அரசியல் ஞானமென்று தன் சொந்த நலன்களை மறைத்து சிறுபான்மை இனங்களுக்காகப் பாடுபடும் போலித் தோற்றத்தை கொள்ளுவது இந்திய அரசுக்கு என்றும் சிறுமையாகவே அமையும்.

1987-ல் இந்திய இராணுவம் இலங்[கை]
இறங்கியது, இலங்கையின் இந்திய எதி[ர்]
யும், இந்திய எதிரிகளின் உறவையும் முறியடி[...]
என்று இந்தியப் பிரதிநிதி தீக்சித் பகிரங்க[...]
கூறியுள்ளார். ஆனால், இதை மூடிமை[...]
தமிழீழ நலன்களை நிலைநாட்டும் போலித் [...]
றத்தையும் சேர்த்துக் கொண்டனர்.

ஜெயவர்தனா காலத்தில், தமிழீழ நலன்[...]
பாராமுகப்படுத்தி இந்திய நலன்களைக் காப்[...]
ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், பிரேம[...]
சனாதிபதி ஆனதும் தமிழீழ நலன்களை வ[...]
தும் படலம் ஆரம்பிக்கப்பட்டது.

1990-ல் மார்ச் மாதம் 31-ஆம் தேதி இ[...]
இராணுவம் இலங்கையில் இருந்து வெ[...]
வேண்டிய நிலையில் இந்தியா தன் சொந்த[...]
களையும் தமிழீழ நலன்களையும் அடையாம[...]
அவமானத்துடன் வெளியேற வேண்டிய நி[...]
வாகியுள்ளது.

ராஜீவ்காந்தியின் தலைமையில், இந்திய உ[...]
துறை தமிழீழ விவகாரத்தைச் சிறுமைப்ப[...]
சீரழித்தது, மறக்கமுடியாத உண்மை. [...]
உணர்ந்த வி.பி சிங் பதவிக்கு வந்ததும் [...]
தமிழீழ விவகாரத்தில் தலையிடக்கூடாது [...]
கட்டளையிட்டார். ஆனால், அந்தக் கட்[...]
நடைமுறையில் செயல்பட்டதாய்த் தெரியவி[...]

இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றம் த[...]
பிரச்சினையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்[...]
வில்லை. எதிர்மாறாகப் பிரச்சினையை [...]
குழப்பியுள்ளது என்பது கண்கூடு.

நீதியையும், நேர்மையையும் கடைப்[...]
ஆர்வமும்; ஆற்றலும் அற்ற எந்த இந்தியத்த[...]
யும் இந்துமா சமுத்திரத்தில் சமாதானத்[...]
முன்னேற்றத்தையும் நிலைநாட்டுவது அரிது[...]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருக்குறள்

தமிழன்' தனித்துவத்தையும், பெருமையையும் கத் திருக்குறள் நல்ல சான்றாக அமைகிறது. குறளில் மனிதனை மனிதனாய் மதித்து நடத் தத்துவம் ஆழமாய் விளக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆரியரின் வேதங்களில் மனிதன் கடவு சித்தரிக்கப்படுகிறான். அதே வேளையில் மனி மிருகத்திலும் கேவலமாய் நடத்தும் பழக்க ங்கள் சமயரீதியில் கையாளப்படுகின்றன.

ஆரியத்திற்யம் திராவிடத்திற்கும் உள்ள அடிப் வேற்றுமை இங்குத் தெளிவாகின்றது. னம் தமிழ்மறையான திருக்குறளைப் பின்பற்றி றய உலகிற்கு ஒரு மேன்மையான தத்துவத் தெளிவுபடுத்த வேண்டும்.

0. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

-ரை : இனிய உளவாக—இனிய சொற்கள் ம்போது, இன்னாத கூறல்—இனிமையில்லாத களைப் பேசுவது, கனி இருப்ப காய் கவர்ந்து —கனி இருக்கும்போது காயைப் பறிப்பதைப் றது.

பா-ரை : இனிமையான வார்த்தைகள் வேண் ட்டும் இருக்கும்போது, கடுமையான வார்த் ளைப் பேசுவது பழங்களை விட்டுவிட்டுக் காய் பறித்துக் கொள்வதைப் போலத்தான்.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது அன்று.

ரை : நன்றி மறப்பது நன்று அன்று—உத மறப்பது நல்லதல்ல. நன்று அல்லது அன்றே து நன்று—நல்லது அல்லாததை அப்போதே விடுவது நல்லது.

பா-ரை : ஒருவன் நம்முடைய துன்ப காலத் னக்குச் செய்த உதவியை மறப்பது நல்லதன்று. செய்யும் குற்றத்தை உடனே மறந்து விடுவது .

118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ
வமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

ப-ரை : சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து—சரிபார்த்து நிறுத்தளக்கின்ற துலாக் கோலைப் போல இருந்து, ஒரு பால் கோடாமை சான்றோர்க்கு அணி - ஒரு பக்கமாகச் சாய்ந்து விடாமலிருப்பது உயர்ந்த குணமுள்ளவர்களுக்கு அழகு.

பொ-ரை : பண்டங்களைச் சரிசமனாக நிறுத்து கின்ற தராசுபோல ஒரு பக்கத்திலும் சாயாமல் இருப் பதுதான் உயர்ந்த குணமுள்ளவர்களின் லட்சணம்.

127. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

ப-ரை : யாகாவார் ஆயினும் நாகாக்க - எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும். காவாக்கால்-அடக்காவிட்டால், சொல் இழுக்குப் பட்டு சோகாப்பர் - சொல்லல குற்நப்பபடுத் துன் பத்துக்கு ஆளாவார்கள்.

பொ-ரை : எதை அடக்கியாளாவிட்டாலும் நாக்கை அடக்கியாள வேண்டும். அடக்காவிட்டால் குற்றமான சொல்லைப் பேசித் துன்பப்பட நேரும்.

129. தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

ப-ரை : தீயினால் சுட்ட புண் உள் ஆறும்- நெருப்பினாற் சுட்டு விட்ட புண் உள்ளே ஆறிவிடும். நாவினால் சுட்ட வடு ஆறாது—நாக்கினால் சுட்ட வசை ஆறாது.

பொ-ரை : நெருப்பினால் சுட்ட புண் வெளி யில் தழும்பு இருந்தாலும் உள்ளே ஆறி விடும். ஆனால் நாக்கினால் உண்டாக்கிய வசையின் புண் வெளியே தழும்பில்லா விட்டாலும் உள்ளத்தில் ஆறாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடல்கோளால் தமிழ்மக்கள் குடி பெயர்ந்து குமரிமுதல் இமயம்வரை அலைய நேர்ந்ததை இளங்கோவடிகள்

''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துப்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன்''

என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இமயமலை வரையில் தமிழ்மக்களைக் குடியிருத்திப் பாண்டிய நாட்டிலிருந்து பாண்டியன் அரசாண்டான் என்னும் செய்தி, ஆரியர் வருகை நிகழாமலிருந்தால் இந்தியா முழுவதும் தமிழ் பேசும் பெருநிலமாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவிக்கிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திருக்குறள் எல்லாச் சமயத்தினர்க்கும் எல்லா நாட்டார்க்கும் பொதுவான அறநெறிகளைக் கூறுவதால் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை அறிய முடிகிறது.

## மூவேந்தர் வரலாறு

கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் ஆட்சிபுரிந்த தமிழ்வேந்தர்களும் அவர்களைப் பாடிய புலவர்களும் காலநிரலின்படி கணிக்க இயலும் வகையில் பதிற்றுப்பத்தில் சேரமன்னர்களின் ஆட்சிக்காலம் குறிக்கப்பட்டுள்ளது.

கடைக் கழகக் காலத்து மூன்றாம் தமிழ்ச் சங்கத்தின் முதலரசனாகிய முடத்திருமாறன் காலத்திலிருந்து கி. மு. மூன்றாம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த பாண்டியர்களின் பெயர் தெரியவில்லை. கி.மு. 322 இல் பாண்டிய நாட்டைப் பெண்ணரசி ஆட்சிபுரிந்ததாக மெகசுதனிசு கூறியிருப்பதால் அவளைத் தடாதகை பிராட்டியாகக் கருதி அவளுடைய தந்தை முதுகுடுமிப்பெருவழுதியை கி.மு.352 ஆண்டளவில் பாண்டியநாடாண்ட வேந்தனாகக் கருதலாம். இதே காலத்தில் சேர நாட்டை ஆண்டவன் குட்டுவன் உதியஞ் என்பது பதிற்றுப் பத்தினால் தெரியவரு முதுகுடுமியைப் பாடிய காரிகிழார் நெட்டிம ஆகியோர் உதியஞ்சேரலுக்குச் சம கால களாகக் கருதலாம்.

### கி.மு. 350 — கி.மு. 328

குட்டுவன் உதியஞ் சேரலாதன் 22 ஆண் ஆட்சி புரிந்தான். இவனைப் பாடிய ஈழ நா நாகமரபைச் சார்ந்த முரஞ்சியூர் முடிநாக என்னும் பெரும்புலவர் மதுரைத் தமிழ்ச் சங் வீற்றிருந்தார். முதுகுடுமிபெருவழுதியின் கால இவர் வாழ்ந்திருக்க வேண்டும். வடக்கே பெ அரசர்களும் இக்காலத்தில் தமிழ்வேந்தர்க சமகால மன்னர்களாக ஆட்சி புரிந்திருந்தனர்

### கி.மு. 328 — கி.மு. 270

இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆ கள் ஆட்சிபுரிந்தான். இவனைக் குமட்டூர்க் க னார் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் யிருக்கிறார். அரசர்கள் குட்டுவன், கோதை, ஆ சேரல், இரும்பொறை, கடுங்கோ போன்ற பெயர்களைக் கொண்டவர்கள். இம்மன்னன் தில் வடமேற்கு இந்தியாவில் அலெக்சா கிரேக்கப் படையெடுப்பு நடைபெற்றது.

### கி.மு. 270 — கி.மு. 245

சேரன் பல்யானை செல்கெழு குட் காலத்தில் வடநாட்டை ஆண்ட பெருமன் அசோகன் (கி.மு.272-232). சோழநா பெரும்பூண்சென்னியும் பாண்டிய நாட்டில் ஒ யூர் தந்த பூதப்பாண்டியனும் ஆட்சி புரிந் வடுகர் துணையுடன் மோரியர் தமிழ்நாட் எல்லைப்புறம்வரை படையெடுத்ததைக் குடவ கீரத்தனார் பாடியிருக்கிறார். நன்னன், ஏற் நீழல்எவ்வி, கங்கன், கட்டி போன்ற கு மன்னர்களும் இக்காலத்தில் வாழ்ந்திருந்தனர்.

www.tamilarangam.net

# ஐந்திணை




தமிழகத்தின் நில அமைப்பைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து திணைகளாகப் பிரித்தனர் நம் முன்னோர்.

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனப்பட்டது. மலையும், காடுகளும் மழைவளம் பெறாமல் கொடைநீர் வறண்டு காட்சியளித்ததால் பாலை நிலம் எனப்பட்டது.

ஐந்து நிலங்களிலும் உயர் செடிகொடி மரங்கள், பறவைகள், உயிர்கள் ஆகியவை வெவ்வேறானவை அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளும் வெவ்வேறானவை.

குறிஞ்சிநிலம் வேட்டைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. முல்லை நிலம் கால்நடை வளர்ப்பை அடிப்படைத் தொழிலாகக் கொண்டது. மருதநிலத்தில் நெல்லும் கரும்பும் விளையும் வேளாண்மை மிகுதி. நெய்தல் நிலத்தில் மீன் பிடித்தலும், கடல் வாணிகமும் மிகுதி. மக்கள் தொன்முது காலத்திலிருந்து நாகரிக ஏணிப்படிகளில் ஏறி வளர்ந்து வந்த காட்சியை ஐந்திணைப் பாகுபாடு நமக்குத் தெரிவிக்கிறது. இதனை (Ecology) என்று குறிப்பிடுவர்.

இல்வாழ்க்கை முறைகள் ஐந்து திணைகளை ஒட்டிப் பிரிக்கப்பட்டன. நேரிற் கண்டு காதல் கொள்வது குறிஞ்சி, இல்வாழ்வது முல்லை, ஊடல் கொள்வது மருதம், இரங்குவது நெய்தல் — பிரிவது பாலை.

ஐந்திணை வாழ்க்கையை அன்பின் ஐந்திணை எனப்பிற சங்க இலக்கியங்கள் இந்த ஐந்திணைப் பாகுபாட்டை எட்டியே இயற்றப்பட்டுள்ளன. தமிழ்ப் பண்பாட்டினை ஐந்திணைப் பாகுபாடு தெளிவாக விளக்குகிறது.

ஐந்திணை அமைப்பில், எம் முன்னோரின் நுணுக்கமான ஆராய்ச்சியும், அறிவும் வெளிப்படையாகிறது சூழ்நிலையால் உளவளப் பாதிப்பைக் கணித்திருப்பது முதிர்ந்த விஞ்ஞான அறிவைச் சுட்டிக்காட்டுகிறது. 19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய நுண்ணறிவு எமது முன்னோர் மத்தியில், கி.மு. நூற்றாண்டுகளில், சாதாரண நிலை என்பது வியப்புக்குரியது. ஈன்று எம் நிலை என்ன என்பதை ஆராய்வது அவசியமாகின்றது.

---

தமிழன் வாசகர் வட்டத்துக்காக ச.அ. டேவிட் அவர்களால் வெளியிடப்படுகிறது. எல்லாத்தொடர்புகளுக்கும்
ச. அ. டேவிட் 1078 'ஐ' பிளக் 17ஆம் பிரதான வீதி, மேற்கு அண்ணாநகர், சென்னை-600 040



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்